**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

************

**<u>ஊடக அறிக்கை</u>**

<u>இந்தியாவில் இடம்பெற்ற பழங்குடி நடன விழாவில் பங்கேற்ற கண்டியை சேர்ந்த நடனக் குழு</u>

கண்டியை சேர்ந்த ஸ்ரீ சத்ய சாய் கலாலயத்தின் பணிப்பாளர் திருமதி. உமா ஸ்ரீதரன் அவர்கள் தலைமையிலான 12 பேர் அடங்கிய நடனக்குழுவினர் இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் இடம்பெற்ற 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய பழங்குடி நடன விழாவில் கலந்துகொண்டனர்.

இலங்கையின் சுதேசிய நடன வகைகள் பலவற்றினை அரங்கேற்றி இக்குழுவினர் பார்வையாளர்களை மகிழ்வித்திருந்தமை குறிப்பிடத்தக்கவிடயமாகும். 2019 டிசம்பர் 27-29 வரையான மூன்று தினங்கள் இந்த நடன விழா அங்கு நடைபெற்றிருந்தது. முதலாவது நாளில் இக்குழுவினர் பானை நடனம் மற்றும் அறுவடை நடனம் ஆகியவற்றை அரங்கேற்றியிருந்தனர். அடுத்த நாள் ரபான் நடனத்தையும் வாள் நடனத்தையும் மறுநாளான இறுதி நாளன்று அவர்கள் மயில் நடனத்தை அரங்கேற்றியிருந்தார்கள்.

இந்த நடனக்குழுவிற்கு சத்தீஸ்கர் மாநில அரசாங்கமும் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையும் (ICCR) அனுசரணை வழங்கியிருந்தது. சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் கௌரவ. புபேஷ் பஹேல் அவர்களையும் இக்குழு சந்தித்திருந்தநிலையில் அவரால் சான்றிதழ்களும் நினைவுப்பரிசுகளும் வழங்கப்பட்டிருந்தன.

இந்தியாவின் சகல மாநிலங்களிலிருந்தும் இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ், பெலாரஸ், தாய்லாந்து, மற்றும் உகண்டா போன்ற நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி 80 குழுக்களை சேர்ந்த 1200 பேர் 2019 ஆம் ஆண்டுக்கான தேசிய பழங்குடி நடன விழாவில் கலந்துகொண்டிருந்தனர்.

*****

கொழும்பு

06 ஜனவரி 2020